விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 260 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை (05.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்.இந்துக் கல்லூரியில் 33 பேர் 3ஏ பெற்று சாதனை

மாவட்ட ரீதியில்

# கணிதத்தில் முதல் ஆறு இடங்களையும் உயிரியலில் முதல் 5 இடத்தையும் தனதாக்கியது

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர 2022 (2023)ஆம் ஆண்டுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 33 பேர் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதன்படி கணிதப் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதல் ஆறு இடங்களையும் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

அந்தவகையில் சிநேகன், அபிஷேக், அபிஷேகன், தீபக், மொஹமட் இஸ்ஸத், கிஷா என் ஆகியோர் முதல் ஆறு இடங்களையும்,

உயிரியல் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதல் 5 இடங்களையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

அந்தவகையில் வித்தியாசாகர், பவித்திரன், சாரங்கன், அமலன், தனுசன் ஆகியோர் முதல் 5 இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.(ம-7,33,104)

உயர்தரப் பரீட்சை

## பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.doenets.lk/exam 15

## விபரீத முடிவெடுத்தவர் தென்மராட்சியில் மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - அல்லாரைப் பகுதியில் விபரீத முடிவெடுத்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

நஞ்சருந்தி உயிருக்குப் போராடிய முதியவரை உறவினர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் அல்லாரை தெற்கு மீசாலைப் 15

ஈஸ்டர் தாக்குதல்

# சனல் 4 இன்று அதிர்ச்சி காணொளி

## இலங்கையின் முக்கிய புள்ளிகள் சிக்கலாம்

(கொழும்பு)

2019 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அதிர்ச்சி காணொளியை சனல் 4 இன்று வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

பிரித்தானிய நேரப்படி 11.05 மணிக்கு இந்த ஆவணப்படம் ஒளிபரப்பப்படும். இலங்கையின் முக்கிய புள்ளிகள் இதில் சிக்குப்படலாம்.

(15ஆம் பக்கம் பார்க்க)



லிட்ரோ, லாஃப்ஸ்

## எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

லிட்ரோ, லாஃப்ஸ் எரிவாயு விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி லாஃப்ஸ் எரிவாயுவின் 12.5 கிலோ சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விலை 3,835 ரூபாயாகும்.

05 கிலோ சிலிண்டரின் விலை 59 15

## தமிழர்களை இல்லாதொழிக்க சிங்கள - பௌத்த பேரினவாதம் திட்டம்

இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

பெரும்பான்மையினரின் சண்டித்தனத்துக்கு நாம் ஒருபோதும் இடமளியோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் தலைநகரான 15

முகமாலையில்

## 28 வயது இளைஞன் அடித்துக் கொலை

(கிளிநொச்சி)

முகமாலை எழுதுமட்டுவாள் பகுதியில் இளைஞன் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் ஜெதீஸ்குமார் (வயது - 28) என்பவரே உயிரிழந்தவராவார். 15

மீற்றர் வட்டி கொடுமை

## யாழில் 10 மாத குழந்தையின் தாய் உயிர்மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

மீற்றர் வட்டிக்காரர்களின் கொடுமை காரணமாக யாழ்ப்பாணத்தில் 10 மாத பெண் குழந்தையின் தாய் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிர் மாய்த்துள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மூன்றுபிள்ளைகளின் தாயாரான யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஜெயராஜா அருள்பாலினி 15

உ/த பெறுபேறுகள்

## தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றோர்

(கொழும்பு)

நேற்று வெளியான 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்றுக் கொண்ட மாண 02

## இலங்கையின் தேவையை இந்தியா உணர்ந்துள்ளது

பாரத பிரதமர் மோடி

(புதுடில்லி)

இலங்கை எதிர்கொண்ட கடினமான காலங்களில், இலங்கையின் தேவைகளை இந்தியா மிகவும் உணர்ந்து செயற்பட்டதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலமைச் சிகரம்

அமரர் வே.அன்பழகன் ஞாபகார்த்தமான

தரம் 5 மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்

ZOOM ஊடான வழிகாட்டல் கருத்தரங்கும் - 2023

தரம் 5

முற்றிலும் இலவசமானது

நாளை தொடக்கம்

**எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதி பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாபெரும் இலவச மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும் கருத்தரங்கும்!!!**

**முழுமையான புள்ளிகளை பெறுவதற்கான விசேட செயலமர்வு**

தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற இலங்கையின் பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர் புலமைச்சிகரம் **வே.அன்பழகன்** (யாழ்.அன்பொளி கல்வி நிலைய நிறுவுநர்) அவர்களின் ஞாபகார்த்தமாக **'ஐவின்ஸ் தமிழ்'** செய்தி இணையத்தளம் www.ivinstamil.com வழங்கும் மற்றுமொரு கல்விப் பணி.

நாளை முதல்

**மாதிரி வினாத்தாள்கள், கருத்தரங்கு தொடர்பான அட்டவணை**

| | |
|---|---|
| 06.09.2023 | யாழ்.முன்னணி ஆசிரியரும் யாழ்.அறுவடை வெளியீட்டு ஆசிரியருமான திரு.சிவ.தீபன் (வினாத்தாள் வெளியீடு). |
| 07.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும் |
| 08.09.2023 | யாழ்.பிரபல ஆசிரியரும் புலமை ஒளி, புலமை ஆரம் ஆசிரியருமான அளவையூர் திரு.கே.ஜெயரமணன் (வினாத்தாள் வெளியீடு) |
| 11.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |
| 12.09.2023 | திருமலை மாவட்ட முன்னணி ஆசிரியரும் யாழ்.பார்வை, யாழ்.ஆசான் ஆசிரியருமான திரு.ஆ.ஜெயநேசன் (வினாத்தாள் வெளியீடு) |
| 13.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |
| 14.09.2023 | புலமைத் தேடல் வெளியீட்டு ஆசிரியர் திரு.செ.நிஷாந்தன் (வினாத்தாள் வெளியீடு) |
| 15.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |
| 18.09.2023 | அதிபரும் முன்னாள் புலமைச்சுடர் பிரதம ஆசிரியருமான திரு.தி.நிலீப்குமார் (வினாத்தாள் வெளியீடு) |
| 19.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |
| 20.09.2023 | யாழ்.பிரபல அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர் திரு.பி.பத்மநேசன் (வினாத்தாள் வெளியீடு) |
| 21.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |
| 22.09.2023 | கொழும்பு மாவட்ட முன்னணி ஆசிரியரும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியருமான திரு.எஸ்.ஏ.சந்திரபவன் (வினாத்தாள் வெளியீடு) |
| 25.09.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும் |
| 27.09.2023 | புலமைச்சிகரம் வே.அன்பழகன் ஆசிரியர் (வினாத்தாள் பகிர்வு மட்டும்) |
| 29.09.2023 | யாழ்.முன்னணி ஆசிரியரும் குறிஞ்சி வெளியீட்டு ஆசிரியருமான திரு.சண்.சுதர்சன் (வினாத்தாள் வெளியீடு) |
| 01.10.2023 | முன்னைய நாள் வினாத்தாள் சூம் ஊடான கருத்தரங்கு மூலம் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படும். |



தரம் 5

**சூம் கருத்தரங்கு நேர விபரங்களை கருத்தரங்கு வட்சப் குழுவில் இணைந்திருந்து உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியும்.**

**இச்சேவையின் பூரண பயனைப் பெற பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவை**

01. 06 செப்ரெம்பர் 2023 முதல் எமது ஐவின்ஸ் தமிழ் இணையத்தளத்தின் ஓர் உப பிரிவாக செயற்படும் அன்பழகன் ஞாபகார்த்த கல்வி இணையப் பக்கத்தில் இந்த மாதிரி வினாத்தாள்கள் பதிவேற்றப்பட்டு எமது வட்சப் குழுமத்தில் உரிய நாட்களில் வெளியிடப்படும் எதிர்பார்க்கை வினாத்தாள்களை (பகுதி I+ பகுதி II) டவுண்லோட் செய்து பிரதி எடுத்து பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தல் வேண்டும்.

02 பின்னர் அன்றைய தினம் இரவு எம்மால் வெளியிடப்படும் புள்ளியிடல் திட்டத்திற்கு அமைவாக திருத்தம் செய்து புள்ளியிட வேண்டும்.

03. உரிய கருத்தரங்கு நாட்களில் எமது வட்சப் குழுமத்தில் வெளியிடப்படும் சூம் லிங் ஊடாக உரிய நேரத்தில் கருத்தரங்கில் இணைந்து சந்தேகமான வினாக்களின் விடைகளை கேட்டறிய முடியும். கருத்தரங்கின்போது பெற்றோர் அருகில் இருப்பது அவசியமாகும். கருத்தரங்கானது பெரும்பாலும் இரவு வேளையில் 8.00 மணி தொடக்கம் 9.30 மணிவரை இடம்பெறும்.

**இந்த வழிகாட்டுதல் சேவையைப் பெற விரும்புபவர்கள் T.P 0768623472, 0762920111 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு எமது வட்சப் குழுமத்தில் இணைந்து உடனுக்குடன் இக்கருத்தரங்கு தொடர்பான தகவல்களையும் வினாத்தாள்களையும் கருத்தரங்கு நேரங்களையும் ஏனைய விபரங்களையும் பெற முடியும்.**

மேலதிக விபரங்களுக்கு
கருத்தரங்குப் பொறுப்பாசிரியர்
- ஐவின்ஸ் தமிழ் -
T.P:- 076 292 0111

ஏற்பாடு
www.ivinstamil.com
- ஐவின்ஸ் தமிழ் கொம்-
செய்தி இணையத்தளம்

(16941)


# நயினாதீவில் படகில் சென்றவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இருந்து நயினாதீவுக்கு படகில் சென்று கொண்டிருந்த தமிழ் குடிமகன் ஒருவர் ஈவிரக்கமின்றி இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நயினாதீவுக்கு செல்லும் படகுகளில் மேலே அல்லது உள்ளே தரையில் அமர்ந்து பயணிக்க வாய்ப்பு உள்ளது. எனினும் குறித்த பயணி மேல் மாடியில் அமர்ந்துள்ளார். அங்கு சில சிங்கள குடிமக்களும் இருந்தனர்.

இந்நிலையில் சிங்களப் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அங்கிருந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. எனினும் அதற்கு தமிழ் குடிமகன் மறுத்து, "ஏன் நான் மட்டும்?" செல்ல வேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனையடுத்து அவர்களின் உத்தரவை மறுத்த காரணத்திற்காக, குறித்த நபர் கடற்படையினரால்' தாக்கப்பட்டுள்ளார். இதன்போது அங்கிருந்த பொதுமக்களுக்கும் காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் கடற்படையின் காட்டுமிராண்டி தனத்திற்கு பலரும் விசனங்களை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் சமூக வலைதளங்களில் காணொளிகள் வெளியாகியுள்ள நிலையில் பலர் தமது கண்டணங்களை வெளியிட்டுள்ளனர்.

(ம-7,9)

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் முதலிடம்



நேற்று வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் விஜிதரன் யதிவர்மன் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். (ம-7)

## தேசிய மட்...

வர்கள் தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய, தேசிய ரீதியில் கணித பாடத்தில் கொழும்பு றோயல் கல்லூரியின் பானுல பெரேரா முதலாம் இடத்தினை பெற்றுள்ளார்.

அதேநேரம், உயிரியல் விஞ்ஞான பாடத்தில், தேசிய ரீதியில் மாத்தறை சுஜாதா வித்தியாலய மாணவி பிரமுதி பாஷனி முனசிங்க முதலாம் இடம் பெற்றுள்ளார்.

அத்துடன், தேசிய ரீதியில் வணிக பிரிவில் கொழும்பு ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் கவ்தினி தில்சரனி முதலாம் இடம்பெற்றுள்ளார்.

(ம-7)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

**வடமாகாணத்தின் பிரசித்தி பெற்ற விற்பனை வலையமைப்பில் இணைந்து கொள்ள விரும்புகிறீர்களா உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

- விற்பனைப் பிரதிநிதி **(Sales Rep)**
- விற்பனை மேற்பார்வையாளர் **(Sales Supervisor)**
- பணம் பெற்றுக்கொள்பவர் **(Cash Collector)**

- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது
- வயது எல்லை 20-45
- சம்பள விபரம் நேரில்பேசி தகுதிகான் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்
- நேரடியாக உங்களது சுயவிபரக்கோவையுடன் சமுகம் அளிக்கவும்

வெஸ்ரா வூட் & வீவரேஜ் இண்டஸ்ரீஸ் (Vesta Food & Beverage Industries) குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம்

**021 221 3788**
**075 466 5555**
(Whatsapp)

(16945)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16932)

தொடர்புகளுக்கு:- குரு

**076 755 8606, 077 874 3204, 077 288 0152**

## நாகபூஷணி திருமண சேவை

**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA**

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7188)

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்;

# ராஜபக்ஷ விசுவாசிகளுக்கு தொடர்பு

## சர்வதேச ஊடகம் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பின்னணியில் அரச புலனாய்வு சேவையின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே இருந்ததாகவும் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு ராஜபக்ஷ குடும்பத்திற்கு விசுவாசமாக இருந்த இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்றும் சர்வதேச ஊடகம் அறிக்கை தெரிவித்துள்ளது.**



மூத்த இராணுவ உளவுத் துறை அதிகாரியான சுரேஷ் சாலி மற்றும் ஐ.எஸ். அமைப்பு இடையே ஒரு சந்திப்பு 2018 இல் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையை சீர்குலைக்கவும் ராஜபக்ஷர்களை மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு சதித் திட்டம் தீட்டும் வகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

"கூட்டம் முடிந்ததும், சுரேஷ் சாலி என்னிடம் வந்து இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல் தேவை, அதுதான் கோட்டாபய ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி" என ஹன்சீர் ஆசாத் மௌலானா தெரிவித்தார்.

தாக்குதல் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல; திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குப் பின்னர் 6 மாதங்களில் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்து கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்.

இவர் இதற்கு முன்னர் தனது சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கீழ் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்துள்ளார்.

மௌலானா கடந்த ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு குண்டு வெடிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இறுதி செய்யப்பட்ட போதும், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அதை வெளியிட மறுத்து விட்டார்.

மேலும் மௌலானா பல ஆண்டுகளாக ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமான, அரசியல்வாதியான பிள்ளையானுக்கு உதவியாளராக பணியாற்றினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# நாட்டை விட்டு வெளியேறிய குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்

## இன்டர்போல் சிவப்பு அறிக்கை

(கொழும்பு)

கொலை உட்பட பல்வேறு குற்றங்களைச் செய்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற 148 பாதாள உலகக் குற்றவாளிகளை கைது செய்வதற்கு இன்டர்போல் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார சுமித்ராராச்சி தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக்கான பாராளுமன்ற குழுவின் குற்றவியல் மற்றும் சட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட இதனைத் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில் நாட்டை விட்டு வெளியேறிய குற்றவாளிகளை கைது செய்யுமாறு இன்டர்போல் அறிவிப்பு, இலங்கை பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சர்வதேச பொலிஸார் இந்த சிவப்பு அறிவித்தல்களை பிறப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் இந்தியாவில் 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மரண தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்த சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பல நாடுகள் மரண தண்டனையை நிராகரிப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மரண தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சர்வதேச பொலிஸார் சிவப்பு அறிவித்தலை வழங்க மறுத்ததாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 30 ஆயிரம் மெற்றிக் தொன் கனிய மணல் சீனாவுக்கு ஏற்றுமதி

(கொழும்பு)

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பெறுமதியுடைய பெருமளவிலான கனிய மணலை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக்தொன் கனிய மணலே சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச அளவிலான கேள்வி மனுக்கோரல் ஊடாக சீன நிறுவனம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் இறங்குதுறையில் இருந்து அதனை கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக இடம்பெற்றன.

சீன நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் செயற்பட்டது. இலங்கை வழமையாக இறக்குமதிகளையே மேற்கொள்கின்றது. ஆனால் இப்போது எமது நாட்டிலேயே அகழப்பட்ட கனியமணலை ஏற்றுமதி செய்கின்றோம்.

இது ஒரு சிறப்பு வாய்ந்த ஏற்றுமதியாகும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இக்காலத்தில் இடம்பெறும் இந்த ஏற்றுமதி மூலம் பல மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைக்கும் என புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத்துறை நிபுணருமான றையான் றொக்ஷீவூட் தெரிவித்துள்ளார். (நி-5)

# சீரற்ற காலநிலையால் 98 பேர் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக 3 மாவட்டங்களில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த மாவட்டத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 7 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரியிலேயே 91.5 மி.மீ அளவிலான அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கேகாலை, தல்துவ பிரதேசத்தில் 83 மில்லிமீற்றர் மற்றும் வரக்காபொலவில் 63 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

# எரிபொருள் விலை அதிகரிப்பானது பணவீக்கத்திற்கு வழிவகுக்கும்

## பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பு, நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரானது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்து கோரல தெரிவித்துள்ளார்.

விலை அதிகரிப்பானது, குறைவடைந்துள்ள பணவீக்கத்தின் அதிகரிப்புக்கு வழிவகுக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வேலை செய்யும் மக்கள் தங்களது வேதனத்தில் 20 முதல் 40 சதவீதத்தை போக்குவரத்துக்காக மாத்திரம் பயன்படுத்துவதாக ... (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடரை வென்றது ஆஸி அணி




தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதலில் இரு அணிகளுக்கு இடையே இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது.

முதலாவது மற்றும் 2ஆவது போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்நிலையில், இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற தென்னாபிரிக்கா அணி பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த தென்னாபிரிக்கா அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 190 ரன்கள் குவித்தது. ஹென்ட்ரிக்ஸ் 42 ரன்களும், டோனோவன் பெரேரா 48 ரன்களும் எடுத்தனர்.

கப்டன் மார்க்ரம் அதிரடியாக ஆடி 41 ரன்கள் சேர்த்தார்.

அவுஸ்திரேலியா சார்பில் அபாட் 4 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 191 ரன்கள் இலக்குடன் அவுஸ்திரேலியா அணி களமிறங்கியது. டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ் ஜோடி அதிரடியாக ஆடியது. பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்கவிட்டது. ஜோஷ் இங்கிலிஸ் 22 பந்துகளில் 42 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டிராவிஸ் ஹெட் நிலைத்து ஆடி 48 பந்துகளில் 91 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஸ்டாய்னிஸ் அதிரடி காட்டி 37 ரன்கள் எடுத்தார். இறுதியில் 17.5 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்கு 191 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன், அவுஸ்திரலிய அணி 3-0 என இருபது 20 தொடரை முழுமையாக கைப்பற்றி அசத்தியது. டிராவிஸ் ஹெட் ஆட்ட நாயகன் விருதும், மிட்செல் மார்ஷ் தொடர் நாயகன் விருதும் பெற்றனர். (6)

# இங்கிலாந்து தொடருக்கான அயர்லாந்து அணி அறிவிப்பு

அயர்லாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட 50 ஓவர் தொடரில் விளையாட உள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையேயான முதலாவது போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் அந்த தொடருக்கான பால் ஸ்டிர் லிங் தலைமையிலான அயர்லாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அறிவிக்கப்பட்டுள்ள 15 வீரர்கள் விபரம் பின்வருமாறு.

அயர்லாந்து அணி பால் ஸ்டிர்லிங் (கப்டன்), மார்க் அடேர், ஆண்ட்ரூ பால்பிர்னி, கர்டிஸ் கேம்பர், கரேத் டெலானி, ஜார்ஜ் டோக்ரெல், கிரஹாம் ஹியூம், ஜோஷ் லிட்டில், ஆண்டி மெக்பிரைன், பேரி மெக்கார்த்தி, நீல் ராக், ஹாரி டெக்டர், லோர்கன் டக்கர், தியோ வான் வொர்காம், கிரேக் யங் ஆகிய வீரர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்கான போட்டி அட்டவணை செப்டெம்பர் 20 ஆம் திகதி 1 ஆவது ஒருநாள் போட்டி, செப்டெம்பர் 23 ஆம் திகதி 2ஆவது ஒருநாள் போட்டி, செப்டெம்பர் 26 ஆம் திகதி 3 ஆவது ஒருநாள் போட்டியும் இடம்பெறவுள்ளன. (6)

# இங்கிலாந்து அணி வீரர்களை கதிகலங்க வைத்த நியூசிலாந்து




இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் நியூசிலாந்து அணி 4 இருபது-20 மற்றும் 4 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் மற்றும் 2 ஆவது இருபது-20 போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந் நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற நியூசிலாந்து பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 202 ரன்கள் குவித்தது. அதிரடியாக விளையாடிய பின் ஆலன் 53 பந்துகளில் 83 ரன்னும், கிளென் பிலிப்ஸ் 34 பந்துகளில் 69 ரன்னும் சேர்த்தனர். இதையடுத்து, 203 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. நியூசிலாந்து அணியின் துல்லியமான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது.

இறுதியில், இங் கிலாந்து அணி 18.3 ஓவரில் 128 ரன்னுக்கு ஓல் அவுட்டானது. இதனால் நியூசிலாந்து 74 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூசிலாந்து சார்பில் இஷ்சோதி, கைல் ஜேமிசன் தலா 3 விக்கெட்டும், டிம் சவுதி 2 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது பின் ஆலனுக்கு அளிக்கப்பட்டது. (6)

# வெற்றி வாகை சூடிய செம்மலை உதயசூரியன்



புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டு கழகம் வருடாவருடம் நடத்தும் அணிக்கு பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி போட்டி நேற்று முன்தினம் மாலை போட்டியாக விக்னேஸ்வரா விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் செம்மலை உதயசூரியன் எதிர் கோயில் குடியிருப்பு ஜங்கஸ் அணிகள் பலப்பரீட்சையில் மோதின. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் 1 : 0 என்ற கோல் கணக்கில் முன் நிலையில் இருந்தனர்.

இடைவேளையின் பின்னரான ஆட்டம் விறுவிறுப்பை பெற்றது. போட்டி முடிவடைவதற்கு 2 நிமிடங்கள் முன்பதாக கோயில் குடியிருப்பு ஜங்கஸ் அணி கோல் ஒன்றினை போட்டு அணியினை சமப்படுத்தினர். போட்டி நிறைவில் 1 : 1 என்ற கோல்கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. போட்டியின் வெற்றியினை தீர்மானிக்கும் வகையில் 5 வீரர்களை கொண்ட தண்ட உதை வழங்கப்பட்டது. அதில் செம்மலை உதயசூரியன் அணியினர் 4: 3 என்ற கோல் கணக்கில் சம்பியன் பட்டத்தை தமதாக்கிக் கொண்டனர். ஆட்டநாயகனாக உதயசூரியன் அணியின் எடிசன் , தொடர் ஆட்டநாயகனாக ஜங்கஸ் அணியின் ஜனோஜ், சிறந்த கோல்காப்பாளராக உதயசூரியன் அணியின் கோல் காப்பாளர், சிறந்த அணியாக, ஒழுக்க நன் நடத்தையாக சிலாவத்தை இளம் பறவை அணியினர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கான பரிசில்களும் இறுதியில் வெற்றிபெற்றவர்களுக்கு காசோலையும் கேடயங்களும் பதக்கங்களும் வழங்கிவைக்கப்பட்டன.(6-299)

# ஆப்கானை வீழ்த்திய வங்கதேசம்

## ஹசன், ஹொசைசன் அதிரடி




14 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்ற 6 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம். பி பிரிவில் நடப்பு சம்பியன் இலங்கை வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில், லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4 ஆவது லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வங்கதேச அணிகள் மோதின டாஸ் வென்ற வங்கதேச அணி பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி முதல் ஆடிய வங்கதேச அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 334 ரன்கள் குவித்தது மெஹிதி ஹசன் 112 ரன்னும் நஜ்முல் ஹொசைன் 104 ரன்னும் எடுத்தனர்.

இதையடுத்து 335 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி விளையாடியது. இப்ராகிம் சட்ரன், கப்டன் ஹஷ்மத்துல்லா ஷகிடி இருவரும் நிலைத்து நின்று ஆடி அரை சதம் கடந்தனர் இப்ராகிம் சட்ரன் 75 ரன்னும், ஹஷ் மத்துல்லா ஷகிடி 51 ரன்னும் எடுத்து வெளியேறினர். சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

இறுதியில், ஆப்கானிஸ்தான் 44.3 ஓவரில் 245 ரன்னுக்கு ஓல் அவுட்டானது இதன்மூலம். வங்கதேச அணி 89 ரன்களில் அபார வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது மெஹிதி ஹசனுக்கு வழங்கப்பட்டது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கைபேசிப் பாவனைக்கு கட்டுப்பாடுகள் விதிக்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் கைத் தொலைபேசி பாவனைக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் அது தொடர்பான சட்ட கட்டமைப்பை தயாரிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 18 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி பாவனைக்கான தடைச் சட்டத்தை கொண்டு வரத்தயார் எனவும் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கைத் தொலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சிறுவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் குழந்தைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் பல சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளினால் தமது வாழ்வை நாசமாக்கிக் கொண்டிருப்பதாகவும் இன்று அவர்கள் பாடசாலைக்கு கையடக்கத் தொலைபேசியைக் கூட எடுத்துச் செல்வதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். (நி-5)



# ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் 19 வயது இளைஞர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயிர் அச்சுச்றுத்தல் விடுக்கும் வகையில் தமது பேஸ்புக் கணக்கில் பதிவிட்டிருந்த இளைஞர் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் எப்பாவல, மெடியாவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்புத் தேகம மற்றும் எப்பாவல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-5)

# நீர்மின் உற்பத்தி 14 வீதமாக அதிகரிப்பு

## இந்திக அனுருத்த

(கொழும்பு)

நீர்மின் உற்பத்தி 14 வீதம் வரை அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்கின்ற போதிலும் நீர் மின்நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு மழைவீழ்ச்சி பதிவாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியினால் நீர் மின் உற்பத்தி கடந்த நாட்களில் 11 வீதத்திற்கும் 12 வீதத்திற்கும் இடையில் வீழ்ச்சியடைந்ததாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, சமனல வாவியில் ஏற்பட்டுள்ள நீர்க் கசிவை சீரமைப்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று 16 ஆம் நாள் திருவிழா



## கண்ணில் தெரியுது முருகன் காட்சி!

கண்ணில் தெரியுது முருகன் எழில்-அதோ
காட்சி அளிக்குது நல்லூரில்
எண்ணம் பறக்குது வேலனிடம்-தூய
இதயங் குவியுது இவனிடம்
கோபுரம் தெரியுது! பார்த்திடுங்கள்- ஒன்றாய்
கும்பிடக் கைகளைச் சேர்த்திடுங்கள்
பாவமே எரியுது நோக்கிடுங்கள்- அவன்
பாதச் சிறப்பினைப் பாடிடுங்கள்.

பார்வதிதாசன்,
தாவடி கிழக்கு.

## நல்லை முருகன் பேரைச் சொல்லு

அலைபாயும் மனித மனமே
ஒருமுறை நல்லை முருகன் பேரைச் சொல்லு
தொலைதூரம் போகும் துன்பம்
தொட்டதெல்லாம் வெற்றியாகும் நாம்
வேண்டுவது எல்லாம் தருவான்
நம்பினோர்க்கு என்றும் துணையாய் இருப்பான்
நம்- எல்லாப் பிணிக்கும்
அவன் கடைக்கண் பார்வை
ஒன்றே மருந்தாய் இருக்கிறது.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

# இராசிபலன்

05.09.2023
ஆவணி 19 ,செவ்வாய்க்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.41 மணிவரை

பரணி பிற்பகல் 3.20 மணிவரை
சுபநேரம் -10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை

கார்த்திகை விரதம்.
சந்திராஷ்டமம்-
அத்தம், சித்திரை.

வளவன்

**மேஷம்** கொடுக்கல் -வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவர் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**துலாம்** நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்** பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**தனுசு** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் . நாள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

இன்று நாம் செய்யும் நன்மை நாளை நாம் பெறும் இன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 நாட்களுக்குள் தீர்வின்றேல்

# இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம்

### யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்..

இந்தியாவின் தமிழகத்துக்கு 14 பேர் கொண்ட வடபகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை சந்தித்து பேச தீர்மானித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே குறித்த முடிவை எட்டியதாக தெரிவித்தார்.

மேலும் 14 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாட்களில் குறித்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (நி-6-33-104)

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பாலஸ்தாபனம் நாளை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9.27 மணி தொடக்கம் 10.44 மணிவரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## தெய்வீக சுக அனுபவம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகும் யாழ் இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்து வரும் ஒன்பதாவது தெய்வீக சுகானுபவம் நிகழ்வில் இந்தியாவின் புல்லாங்குழல் வாத்திய விற்பன்னர் ஜே.ஏ.ஜெயந்த் மற்றும் வயலின் வாத்திய விற்பன்னர் வி.அனந்தகிருஷ்ணன் ஆகியோரின் இசை நிகழ்வு மற்றும் பயிற்சிப்பட்டறை ஆகியன நடைபெறவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் பயிற்சிப்பட்டறையும் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறை மற்றும் இசைநிகழ்வு என்பவற்றில் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (5)

## தோட்டவெளியிலுள்ள ஆலயத்தில் உண்டியல்கள் உடைத்து திருட்டு

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் எருக்கலம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் உள்ள இரு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு எருக்கலம்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-285)

## கைதடி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக கபில்ராஜ்



(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலையத்திற்கு புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக ந.கபில்ராஜ் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் தனது கடமைகளை கடந்த 1 ஆம் திகதி அன்று பொறுப்பேற்றுள்ளார்.

கைதடி கமநலசேவை நிலையத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய அருள்நேசன் காரைநகர் கமநல சேவை நிலையத்திற்கு இடமாற்றம் கிடைத்து சென்றுள்ள நிலையில் புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக ந.கபில்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு நாளை 6 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இசைஅரங்கு இடம்பெறும்.

இதில் பாட்டு - காத்திகாயினி ரங்கநாதசர்மா, வயனின் - கே.வேலதீபன், மிருதங்கம் - மு.சுலக்சன், கஞ்சிரா - பு.வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் இசை அரங்கில் பாட்டு-பத்மநாதன் சிவமைந்தன், வயலின் - இ.நிரோஜன், மிருதங்கம் - வ.ரமணசர்மா, கஞ்சிரா - ர.லயசர்மா, முகர்சிங் - நி.மோகனதர்சன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (நி-6)

## தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் மற்றும் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் திருமுன்னிலையில் யா/பெரியபுலம் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.பிரதேச செயலாளர் சாம்பவசிவம் சுதர்சன், சிறப்பு அதிதியாக சைவபரிபாலன சபை செயலாளர் வி.ஸ்ரீசக்தி வேல் ஆகியோர்கலந்து கொள்ள வுள்ளனர். (நி-6)

## வீட்டின் முன்பாக நின்ற மோ.சைக்கிள் அபேஸ்

(கரணவாய்)

வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்று களவு போய் உள்ளது.

கரவெட்டி மாதா கோயில் பகுதியில் உள்ள வீடொன்றிலே குறித்த சம்பவம் கடந்த மாதம் 28 ஆம்திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில் குறித்த இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு குடிதண்ணீர் குழாயினை பழுது பார்த்து விட்டு திருப்பி வந்து பார்க்கும் போதே குறித்த களவுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் குறித்த மோட்டார் சைக்கிள் மூன்று லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்ததாகும். (நி-6-60)

## 765 கிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரு தொகை கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர் ஒருவரே கைது செய்யப் பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்.பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.சுபசிங்க தலைமையிலான குழு குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

கைது நடவடிக்கையின்போது 765 கிராம் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக நடவடிக்கைக்காக சந்தேக நபர் நீதிமன்றத்தில் முற்படுத் தப்படவுள்ளார். (நி-6-33-104)

## மாட்டுவண்டி சவாரி போட்டியில் சீறிப் பாய்ந்த காளை மாடுகள்



(அராலி)

கழகத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களை ஒன்றிணைக்கும் மட்டுவில் ஐக்கிய மக்கள் ... மாட்டுவண்டிச் சவாரி நேற்று முன்தினம் மட்டுவிலில் இடம் பெற்றது.

குறித்த கழகத்தின் இணைப்பாளர் ப.கஜிதரன் தலைமையில் நடைபெற்ற குறித்த போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட மாட்டுவண்டி சவாரிக்காக 34 கழக மாட்டுவண்டி கழக உறுப்பினர்கள், 155 காளைமாடுகளுடன் பங்குபற்றியிருந்தனர்.

மேலும் சவாரியினை கண்டு களிப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் பார்வையாளர்கள் வருகை தந்தனர். (நி-6-104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேற்றம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் கடந்த சில மாதங்களாக ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.**




அந்தவகையில் 2023 ஆம் ஆண்டின் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதியில் 200,000இற்கும்மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட 200,026 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அதிகளவான வெளியேறல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் மொத்தம் 311,000 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

இந்த வருடமும் 300,000 பேர் வெளிநாட்டு வேலைக்காக செல்வார்கள் என்று தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சு மதிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உயர்தரப் பரீட்சையை பிற்போடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் உரிமைகளையும் நடைமுறைச் சூழலையும் புறக்கணிக்கும் வகையில் பரீட்சை திணைக்களம் செயற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நவம்பர் மாதத்தில் பரீட்சையை திட்டமிடுவதால், இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதற்கு இரண்டு மாதங்களுக்கும் குறைவான கால அவகாசமே கிடைக்கும் என சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.



எவ்வாறாயினும் பாடப் பிரிவுகளை மாற்றி மீண்டும் பரீட்சைக்கு அமர்கின்ற மாணவர்களுக்கு இந்த கால அவகாசம் போதாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

# மசகு எண்ணெயின் விலை நேற்றும் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

நேற்றைய நிலவரப்படி டபிள்யூ.ரி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.85 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. அத்துடன் பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88.79 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

எனினும் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை வீழ்ச்சியை பதிவு செய்து 2.67 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5)

# உயரும் நெல் விலை

(கொழும்பு)

அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்தாலும் நெல் விலை உயர்ந்துள்ளதாக நெல் விற்பனை சபை தெரிவித்துள்ளது. இந்நிலையில் நெல் விற்பனைச் சபை நிர்ணயித்த விலையை விட தனியார் வர்த்தகர்கள் அதிகளவு அரிசியை கொள்வனவு செய்வதாக நெல் விற்பனைச்சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்தார்.

இதனால், கிடங்குகள் திறக்கப்பட்ட போதிலும் விவசாயிகள் தங்களது பயிர்களை விற்பனை செய்து வாரியத் திடம் கொடுப்பதில் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சந்தையில் அரிசியின் விலை அதிகரிப்பதற்கு நெல்லின் விலையேற்றமே பிரதான காரணமாகும். எனவே, நெல் விலை உயர்வும் அரிசி விலை உயர்வுக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# கோடிக்கணக்கான நாணயத் தாள்களை அழித்தது இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

கடந்த ஆண்டு சேதமடைந்த அல்லது சிதைக்கப்பட்ட 207.3 பில்லியன் பெறுமதியான 238.5 மில்லியன் நாணயத்தாள்களை இலங்கை மத்திய வங்கி அழித்துள்ளது.

நாட்டில் சுத்தமான மற்றும் தரமான நாணய புழக்கத்தை உறுதி செய்வதற்காக மத்திய வங்கி அவ்வப்போது சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை அழித்து வருகிறது.

2021 இல் 44.3 பில்லியன் பெறுமதியான 108.2 மில்லியன் நாணயத் தாள்களை அழித்ததுடன் 2020 இல் 62.2 பில்லியன் ரூபாய் பெறுமதியான 127.3 மில்லியன் நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆம் ஆண்டில், 139.8 பில்லியன் பெறுமதியான 235 மில்லியன் நாணயத்தாள்கள் மத்திய வங்கியினால் அழிக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 343.8 மில்லியன் சிதைக்கப்பட்ட நாணயத்தாள்கள் அழிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சீரற்ற காலநிலை காரணமாக மண்சரிவு எச்சரிக்கை விடுப்பு

(ஹற்றன்)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேச செயலகப் பிரிவுக்கு மூன்றாம் நிலை சிவப்பு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை, கேகாலை மற்றும் காலி மாவட்டங்களில் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட நிலை 1 மற்றும் நிலை 2 மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

எனவே, இப்பகுதியில் வசிக்கும் மக்கள், மண்சரிவு மற்றும் பாறைகள் உருண்டு விழுதல் குறித்து விழிப்புடன் செயற்படுமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (நி-5)

# மது போதையில் சாரத்தியம் ஒருவர் பலி, நால்வர் காயம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் மது போதையில் வாகனத்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் இரத்தினபுரியில் இருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கி பயணித்த காரொன்று எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் பாதசாரி கடவையில் வீதியைக் கடப்பதற்கு முயற்சித்த பெண்ணொருவர் மீது மோதியுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், அதில் பயணித்த அவரது சகோதரர், முச்சக்கர வண்டியில் பயணித்த தந்தை மற்றும் மகன் பாதசாரி பெண் உட்பட அனைவரும் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 73 வயதுடைய கொலம்பகேயார பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

விபத்துடன் தொடர்புடைய கார் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் சந்தேகநபர் 30 வயதுடைய திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்து தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்று சற்று அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி முறையே ரூ.313.93 ஆகவும் ரூ.326.28 ஆகவுமாக பதிவாகியுள்ளது.

. கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி முறையே ரூ.314.19 ஆகவும்ரூ. 325.86 ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 193

### பலன் கருதாமல் செய்த உதவி

அமெரிக்காவில் உள்ள ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவன் அவன். அவனுக்கு உற்றார் உறவினர் எவரும் இல்லை. தன்னுடைய படிப்பிற்கான கட்டணத்தை கட்டக் கூட அவனுக்கு வசதியில்லை. அவனும் அவன் நெருங்கிய நண்பன் ஒருவனும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

பிரபல இசைக் கலைஞர் ஒருவரை வைத்து கல்லூரியில் ஒரு இசை நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் இவர்கள் படிப்பிற்கு தேவையான நிதியை திரட்டுவது என்று முடிவானது. அதற்காக அந்த சமயத்தில் அமெரிக்காவிலும் ஏன் உலகம் முழுதும் உலகப் புகழ் பெற்று விளங்கிய போலந்து நாட்டை சேர்ந்த பியானோ இசைக்கலைஞர் இக்னேஸி ஜே.பேட்ரெவ்ஸ்கியை சந்தித்து திகதி கேட்டார்கள். அவரது மேனேஜரோ "சேர் வருவார். ஆனால் நீங்கள் அவருக்கு 2000 அமெரிக்க டொலர் தரவேண்டும்" என்று கூற, இவர்களும் சந்தோஷமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

நிகழ்ச்சிக்கான அந்த நாளும் வந்தது. அந்த நாளில் எதிர்பாராதவிதமாக நகரில் வேறு சில முக்கிய நிகழ்வுகள் இருந்தபடியால் எதிர்பார்த்தபடி டிக்கெட்டுகள் விற்பனையாக வில்லை. ஆகையால் அரங்கம் நிரம்பவில்லை. அரும்பாடுபட்டு விழாவை ஏற்பாடு செய்த இவர்களுக்கு எப்படி இருக்கும்? மனதை திடப்படுத்திக்கொண்டு பேட்ரெவ்ஸ்கியை சந்தித்து நடந்ததை கூறி, "நிகழ்ச்சியை ரத்து செய்து விடலாம்" என்கிறார்கள். ஆனால் பேட்ரெவ்ஸ்கி மறுத்துவிடுகிறார். "நான் திட்டமிட்டபடி நடத்தியே தீருவேன்" என்கிறார்.

ஒரு வழியாக நிகழ்ச்சி முடிந்த பின்னர் அவரை சந்தித்த மாணவர்கள் அவரிடம் அமெரிக்க டொலர் 1600 கொடுத்து, "இது தான் மொத்தம் வசூலான தொகை. மீதியுள்ள தொகைக்கு முன் திகதியிட்டு செக் கொடுத்துவிடுகிறோம். கூடிய சீக்கிரம் அந்த கணக்கில் பணம் செலுத்திவிடுகிறோம். பெரிய மனதுடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறி கெஞ்சியபடி அவரிடம் பணத்தையும் காசோலையையும் கொடுக்க, அதை வாங்கி காசோலையை கிழித்துப்போட்டுவிட்டு "நீங்கள் எனக்கு தரவேண்டிய கட்டணத்தை தரவேண்டாம். அதை தள்ளுபடி செய்கிறேன். இந்த பணத்தை வைத்துக்கொண்டு உங்கள் படிப்புக்கான கட்டணத்தை செலுத்துங்கள்" என்றார்.

பேட்ரெவ்ஸ்கி காலப்போக்கில் மேலும் புகழின் உச்சிக்கு சென்று ஒரு கட்டத்தில் போலந்து நாட்டின் பிரதம மந்திரியாகவே ஆகிவிட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக முதல் உலகப் போர் துவங்கிய காலகட்டம் அது. போலந்து நாடு போரின் பிடியில் சிக்கி சின்னாபின்னமானது.

எப்படி நிலைமையை சமாளிப்பது? கடைசியில் அமெரிக்கா வின் ஆபத்துக்கால உதவிக் குழு அராவை அணுகுகிறார்.

பேட்ரெவ்ஸ்கி கேட்டுக்கொண்டதையடுத்து அமெரிக்காவின் உதவிக்கரம் போலந்துக்கு நீள அடுத்த சில நாட்களில் அமெரிக்காவிலிருந்து போலந்து நாட்டிற்கு ஆயிரக்கணக்கான தொன்கள் உணவு தானியங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அனுப்பப்பட்டன. அதன் மூலம் சுமார் 1.5 மில்லியன் போலந்து மக்கள் பசியாறினர்.

தான் கேட்டவுடன் தன் மக்களுக்கு உணவு பொருட்களை தொன் கணக்கில் அனுப்பிய அமெரிக்காவின் ஆபத்துக்கால உதவிக் குழுவின் தலைவரை நேரில் சந்தித்து கண்கள் பனிக்க நன்றி தெரிவிக்கிறார்.

நோ... நோ.. மிஸ்டர் ப்ரைம் மினிஸ்டர். நீங்கள் நன்றி சொல் லக்கூடாது. நீங்கள் செய்த உதவியை தான் நான் உங்களுக்கு திருப்பி செய்தேன். உங்களுக்கு நினைவிருக்கிறதா? 25 ஆண்டுகளுக்கு முன்பு இங்கே கல்லூரி மாணவர்கள் இருவருக்கு அவர்கள் ஃபீஸ் கட்ட உங்கள் நிகழ்ச்சியை இலவசமாக நடத்திக்கொடுத்து உதவினீர்கள் அல்லவா? அந்த மாணவர்களில் ஒருவன் தான் நான் என்கிறார் ஹெர்பெர்ட் ஹூவர்.

பேட்ரெவ்ஸ்கி கண்கள் கலங்கியபடி அவரை அணைத்துக் கொள்கிறார். காலம் எப்போது யாரை எங்கு வைக்கும் என்று ஒருவராலும் கூற முடியாது. தனிப்பட்ட ஒருவருக்கு செய்த உதவி, எப்படி ஒரு நாட்டிற்கே பன் மடங்கு திரும்ப கிடைத்தது பார்த்தீர்களா? இந்த உலகில் நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதை பன்மடங்கு அறுவடை செய்வீர்கள்.

ஏனெனில், விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் ஒரு போதும் உறங்குவதில்லை! பலன் கருதாமல் பேட்ரெவ்ஸ்கி செய்த உதவி இது. ஆனால் காலத்தினால் செய்த உதவியாயிற்றே. காலம் குறித்து வைத்துகொண்டது.

## இஸ்ரோவின் பேச்சாளர் வளர்மதி காலமானார்

### விஞ்ஞானிகள் இரங்கல்

(டில்லி)

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ வின் பேச்சாளர் வளர்மதி மாரடைப்பால் காலமானார்.

சென்னையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது மறைவுக்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



கடந்த 6 ஆண்டுகளாக இஸ்ரோ ஏவிய முக்கிய உந்துகணை நிகழ்வுகளின் போது வளர்மதி வர்ணனை யாளராக பணியாற்றியுள்ளார்.

இஸ்ரோ விஞ்ஞானிகள் பலராலும் பாராட்டுப்பெற்ற ரேஞ்ச் ஸ்பீக்கர் வளர்மதி யின் குரலுக்கு பல ரசிகர்கள் உள்ளனர்.

கடந்த ஜூலை 30 இல் சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை ஏந்தி சென்ற பி.எஸ்.எல்.வி சி56 உந்து கணை நிகழ்வை கடைசியாக அவர் வர்ணனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## ஏதிலி கோரிக்கையாளர்கள் கனடாவில் சடுதியாக அதிகரிப்பு

(ஒட்டாவா)

ஏதிலிகளுக்கான தரை வழி எல்லை பகுதியை மூடியதன் பின்னர் ஏதிலி கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏதிலிகள் தரை வழியாக அமெரிக்காவிலிருந்து கனடாவிற்குள் பிரவேசிப்பதனை தடுக்கும் நோக்கில் ஐந்து மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவுடனான எல்லைப் பகுதிகள் மூடப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும் எல்லைப் பகுதிகள் மூடப்பட்டதன் பின்னர் சட்டவிரோதமான முறையில் கனடாவிற்குள் பிரவேசிக்கும் நபர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக எல்லை பகுதிகள் மூடப்பட்டால் ஏதிலி கோரிக்கையாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கும் எண்ணிக்கை குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் தற்பொழுது ஏதிலி கோரிக்கையாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிக எண்ணிக்கையிலானவர்கள் விமானம் வழியாக நாட்டுக்குள் பிரவேசிப்பதாகவும் சட்ட விரோதமான முறையில் சில எல்லைப் பகுதிகளுக்குள் இருந்து கனடாவிற்குள் பிரவேசிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாட்களாக இவ்வாறு ஏதிலி கோரிக்கையாளர் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக கனேடிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் 39 ஆயிரம் ஏதிலிக் கோரிக்கையாளர்கள் சட்டவிரோதமான முறையில் எல்லைகளை கடந்து நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏதிலி அந்தஸ்து பெற்றுக் கொள்வதற்காக சிலர் ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உக்ரைனின் தானிய ஏற்றுமதி துறைமுகம் மீது ரஷ்யா தாக்குதல்

(கீவ்)

உக்ரைனின் மிகப் பெரிய தானிய ஏற்றுமதி துறை முகங்களில் ஒன்றின் மீது ரஷ்யா ஆளில்லா வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அவரது துருக்கியப் பிரதிநிதியான ரெசெப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அமெரிக்காவின் ஹவாய் தீவில்

# ஒரு மாதகாலமாக தொடரும் காட்டுத்தீ!

- 114 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு
- 385 பேர் இதுவரை மாயம்
- 15000 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதம்

**(வோஷிங்டன்)**


**அமெரிக்காவின் ஹவாய் மாகாணம் மாவி தீவில் கடந்த ஒரு மாதமாக காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறது. காட்டுத் தீ ஏற்பட்ட பகுதிகளில் 385 பேரைக் காணவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



இதில், 114 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 1,700 களில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சுற்றுலாத் தலமான லஹேனா நகரம் உள்ளிட்ட பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

லஹேனாவில் 13,000 கட்டடங்கள் சேதமடைந்தன.

மேற்கு மாவி பகுதியில் 2,200 கட்டடங்கள் சேதமடைந்தன. (நி-5)



## "ஹக்கூய்" சூறாவளியால் தாய்வானில் விமானங்கள் ரத்து




(தாய்பெய்)

தாய்வானில் நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஹக்கூய் சூறாவளியின் எதிரொலி காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹக்கூய் சூறாவளி காரணமாக தாய்வானின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் நிலச்சரிவு ஏற்படும் அனர்த்தம் உள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## நோபல் பரிசு விழாவில் கலந்துகொள்ள 3 நாடுகளுக்கு தடை விதிப்பு



(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் நடைபெற உள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொள்ள ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தூதர்களை அழைக்கப் போவதில்லை என்று நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது. உக்ரைன் மீதான படையெடுப்பு காரணமாக, ரஷ்யா மற்றும் அதன் நட்பு நாடான பெலாரஸ் தூதர்களை கடந்த ஆண்டும் நோபல் அறக்கட்டளை புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5)

தையிப் எர்டோகனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த தாக்குதல் நேற்று காலை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதலை நடத்துவதற்கு உக்ரைன் இராணுவ வீரர்கள் தயாராகி வருவதாக உக்ரைன் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)

## பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் பிரபல நடிகை உயிரிழப்பு

(புவேனோஸ் ஐரேஸ்)

பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட சிறுநீர் பாதிப்புக் காரணமாக ஆர்ஜெண்டீனாவைச் சேர்ந்த பிரபல நடிகையான சில்வினா லூனா உயிரிழந்துள்ளமை அந்நாட்டு மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

43 வயதான லூனா் கடந்த 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையை மேற்கொண்டிருந்த நிலையில் அவருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் வாரத்திற்கு சுமார் மூன்று முறைகள் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

இதனிடையே சில்வினாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்து வந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர்காக்கும் கருவிகள் மூலம் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் கடந்த 31 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட பக்க விளைவுகள் காரணமாகவே அவருக்கு உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில், அவருக்கு அறுவை சிகிச்சை செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் பிரபலங்கள் உயிரிழந்து வருகின்றனர். குறிப்பாக கடந்த ஏப்ரல் மாதம் பிரபல அமெரிக்க மொடல் அழகியான கிறிஸ்டினா ஆஷ்டனும் கடந்த மே மாதம், பிரபல கன்னட நடிகை சேத்தனா ராஜ்ஜும் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மேற்கொண்ட பின்னர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயலால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைப்பு




(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு தலா 45 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு,மத்தி அளம்பில் - தெற்கு, வடக்கு செம்மலை கிழக்கு, கள்ளப்பாடு- வடக்கு, தெற்கு உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கே குறித்த தலா 45 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த திட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 172 பயனாளிகளுக்கு குறித்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது .(நி-6-299)

## பூநகரி-முக்கொம்பன் பேருந்து சேவை சீரில்லை

### கிராம மக்கள் முறைப்பாடு

(அக்கராயன்)

கிளிநொச்சி,பூநகரி முக்கொம்பன் கிராமத்திற்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகள் ஒழுங்காக இடம்பெறுவதில்லை என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

காலையில் கிளிநொச்சியில் இருந்து பரந்தன், பூநகரி, அரசபுரம், நேரடம்பன் வழியாக் முக்கொம்பனை வந்தடையும் பேருந்து ஒழுங்காக பணியில் ஈடுபடாததன் காரணமாக அரசபுரம், செக்காலை, நேரடம்பன் கிராமங்களில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தரும் 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகை தர முடியாத நிலைமை காணப்படுகின்றது.

தற்போது நலன்புரித் திட்டம் ஊடாக பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நாள் தோறும் வங்கிகளுக்கு செல்லும் பெருமளவு மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் முக்கொம்பன் கிராமத்திற்கு ஒழுங்கான பேருந்து சேவைகள் நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6-350)



மன்னார் வங்காலை புனித அன்னாள் ஆலய பங்கு மக்களுடன் வன்னி மண் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வங்காலை புனித அன்னால் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.குறித்த நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட குருதி கொடையாளர்கள் கலந்து கொண்டு குருதி தானம் வழங்கியுள்ளனர்.

(படம்- ஜோசப்நயன்)

## 'இன்றைய வித்தே நாளைய விருட்சம்'

## சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்டித்து

## புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்புப் பேரணி

(நெளுக்குளம்)

**சிறுவர்களுக்கு எதிரான சரீர தண்டனையினை நிறுத்துவதுடன் வலைத்தள துன்புறுத்தல்களையும் இல்லாமல் செய்யும் சமூக விழிப்புணர்வு பிரச்சார கவனயீர்ப்பு பேரணி ஒன்று புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இடம்பெற்றது.**



புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு பேரணியானது பிரதேச செயலகத்தில் நிறைவுற்றிருந்தது. சைல்ட் பவுண்ட் நிதி அனுசரணையில் எயு லங்கா நிறுவனமானது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்டனர்.

குறித்த பேரணியில் இன்றைய வித்தே நாளைய விருட்சம், சிறுவர்கள் எங்கள் வீட்டு பிள்ளைகள் அவர்களை பாதுகாப்பது பெற்றோரின் கடமை, சிறுவர் உரிமை சட்டத்தை மதியுங்கள், அப்பா, அம்மா, அக்கா, அண்ணா எமது பாதுகாப்பு உங்கள் பொறுப்பு, சிறுவர்களை சங்கடமான சூழ் நிலையில் இருந்து பாதுகாப்பாக வாழ வழிசெய்வோம் போன்ற பல்வேறு வாசகங்களை யுடைய பதாகைகளை தாங்கியவாறு பேரணியில் ஈடுபட்டனர்.

பேரணியின் நிறைவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது. இதில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, எயு லங்கா நிறுவனத்தின் செயற்றிட்ட உத்தியோகத்தர் பி.நந்தகுமார், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நிறுவன ஊழியர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-299)

## சகதியில் புதையுண்ட யானை

### வனஜீவராசிகள் திணைக்களத்தால் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் சேற்றினுள் புதையுண்ட நிலையில் 5 வயது யானையினை நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியிலே மாடு மேய்க்க சென்ற கிராமவாசி ஒருவர் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்கு போராடுவதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் யானையினை மீட்பதற்கான நடவடிக்கையினை வன ஜீவராசிகள் திணைக்களம், பொலிஸார், மற்றும் கிராம மக்கள் இணைந்து முன்னெடுத்ததுடன், யானை மீட்கப்பட்டு பாதுகாப்பாக காட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். கடும் வெப்பம் காரணமாக நீரைப் பெற வந்த யானையே நீரேந்துப் பகுதியில் புதைந்து இருக்கலாம் எனவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (நி-6-250)

## முழங்காவில், கதிராவில் குளங்களை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முழங்காவில் கிராமத்தில் உள்ள முழங்காவில் , கதிராவில் ஆகிய இரு குளங்களை புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழங்காவில் கிராமத்தில் கூடுதலான குடும்பங்கள் ஆழ்துளைக் கிணற்றினை நம்பியே வாழ்கின்றனர்.

அங்குள்ள இரு குளங்களும் தற்போது முற்றாக வற்றியுள்ளது. எனவே எதிர்காலத்தில் இரு குளங்களின் அணைக் கட்டினையும் உயர்த்தி புனரமைப்பதன் மூலம் நீரை சேகரிக்க முடியும். இக்குளங்களில் நீர் காணப்பட்டால் முழங்காவில் பிரதேசத்தில் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுவதோடு குடி நீருக்கான நெருக்கடியும் ஏற்படாது. பூநகரி பிரதேசத்தில் பல சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த இரு குளங்களையும் புனரமைப்பதன் மூலம் முழங்காவில் மக்கள் நன்மையடைவார்கள்.

தற்போது குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள கிராமங்களுக்கு பிரதேச சபை, பிரதேச செயலகம் குடிநீர் விநியோகத்தினை மேற்கொண்டு உள்ளது. (நி-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி, கடன், கல்வியின்மையால்

# அதிகம் பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்கள்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த 10.13 மில்லியன் மக்கள், பொருளாதார நெருக்கடி, கடன், கல்வி இல்லாமை மற்றும் பேரழிவுகளுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளும் திறனின்மை என்பவற்றால் பாதிக்கப்படுவதாக புதிய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.**

ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

25 ஆயிரம் குடும்பங்களின் பிரதிநிதிகளை மாதிரியாகக் கொண்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்படி பாதிப்பை எதிர்கொள்ளும் 12.34 மில்லியன் பேரில், கணிசமான 10.13 மில்லியன் பேர் கிராமப்புறங்களில் வசிப்பவர்களென கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (நி-5)

# கொரிய தூதுவர் மியோன் லீ- ருவன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் மியோன் லீ மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பானது நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் விவசாயம், கல்வி, போக்குவரத்து நீர் மேலாண்மை, சுகாதாரம் மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது குறித்து கொரிய தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இந்நிகழ்வில் கொரிய பிரதித் தூதுவர் திருமதி ஜங் சோங்யீ கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 600 | 500 | 500 |
| தக்காளி | 160 | 130 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 180 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 200 | 250 |
| கரட் | 380 | 320 | 350 | 350 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 80 | 120 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 100 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 160 | 140 | 140 | 150 |
| கறிமிளகாய் | 300 | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 200 | 150 |
| போஞ்சி | 400 | 400 | 200 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 700 | 750 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 240 | 300 | .200 | 350 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50- |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2906

**லட்சுமி**


ஏன்டா... உங்க கடமையுணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லையா



கடமைன்னு வந்துட்டா, நாங்க எதையும் பார்க்க மாட்டோம்.

**வசந்தி**

திருமணப் புகைப்படத்தை பார்த்ததும்,
மகன்: உன் பக்கத்துல யாருப்பா அது செம கியூட்டா நிக்கிறது?
அப்பா: அது உன் அம்மாடா மகனே.




மகன்: அப்புறம் எதுக்குப்பா இந்த குண்டுப் பொம்பளையோட வாழ்ந்துட்டு இருக்க??

**பிரணவன்**




என் பொண்டாட்டி கோவமா இருக்கும் போது வீட்டுக்கு வா. எப்புடி பறக்குது தட்டுன்னு பாரு.

**கருனி**




**ராம்**

திருடன்: ஏட்டய்யா எங்க பேர் கூட "திரு" ன்னு மரியாதையா ஆரம்பிக்குது.



ஆனா உங்க பேர் பாருங்க "போலி"ன்னு ஆரம்பிக்குது...

**சசி**



இன்றே உங்களின் இடத்தைப் புக்கிங் செய்யுங்கள்.
சிவசக்தி நகர், நிலா மெயின் ரோடு,
நிலா பேருந்து நிலையம் எதிரில் நிலா

ங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 274





அவனுடைய கால்கள் அவனை உச்சிமேட்டில் கொண்டு போய்ச் சேர்த்தன. பூங்குழலிக்கு எதிரில் நேருக்கு நேராக அவன் நின்றான். அவளுக்குப் பின்னால், வெகு தொலைவு என்று காணப்பட்ட இடத்தில், கலங்கரை விளக்கின் சிவந்த ஒளி தோன்றியது. அதையொட்டி விரிந்த கடல் பரந்து கிடந்தது. கடலுக்கு எல்லையிட்டு வரையறுத்தது போல் வெள்ளிய அலைக்கோடு நீண்டு வளைந்து சென்றது.

"வந்து விட்டாயா? திண்ணையில் கும்பகர்ணனைப் போல் தூங்கினாயே என்று பார்த்தேன்."

"வீட்டுக்கதவு திறந்த சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். நீ விடுவிடு என்று நடந்து வந்துவிட்டாய்! திரும்பியே பார்க்கவில்லை. அம்மம்மா! உன்னைத் தொடர்ந்து ஓடி வருவது எவ்வளவு கஷ்டமாய்ப் போய் விட்டது?"

"எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?" "நல்ல கேள்வி! நீதானே வரச் சொன்னாய்? மறந்து விட்டாயா?" "எதற்காக வரச் சொன்னேன்? உனக்கு நினைவு இருக்கிறதா?"

"நினைவு இல்லாமல் என்ன? உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய்! எங்கே உன் காதலர்கள்? காட்டு, பார்க்கலாம்!"

"அதோ உனக்குப் பின்னால் திரும்பிப் பார்!" என்றாள் பூங்குழலி.

### ஐந்தாம் அத்தியாயம்
### நடுக்கடலில்

வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய வயிற்றிலிருந்து குடல்கள் மேலெழும்பி அவன் மார்பை அடைத்தன. பிறகு இன்னும் மேலே கிளம்பி அவன் தொண்டையையும் அடைத்துக் கொண்டன. அவனுடைய தேகத்தில் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தன. பழுக்கக் காய்ந்த ஒரு லட்சம் ஊசி முனைகள் அவன் தேகமெல்லாம் துளைத்தன. அத்தகைய பயங்கரக் காட்சி அவன் கண்முன்னே காணப்பட்டது.

முடிவில்லாது பரந்திருந்த இருளில் அங்கங்கே பத்து, இருபது, நூறு அக்கினி குண்டங்கள் தோன்றின.

அவற்றிலிருந்து புகை இல்லை வெளிச்சமும் இல்லை. கீழே விறகு போட்டு எரித்து உண்டாகும் தீப்பிழம்புகளும் அல்ல. வெறும் நெருப்புப் பிண்டங்கள். பூமியிலிருந்து எப்படியோ எழுந்து அவை நின்றன. திடீரென்று அவற்றில் சில பிண்டங்கள் மறைந்தன. வேறு சில தீப்பிண்டங்கள் புதிதாக எழுந்து நின்றன.

ஒரு பிரம்மாண்டமான கரிய இருள் நிறங் கொண்ட ராட்சதன், தனியாகத் தலை ஒன்று இல்லாமல் வயிற்றிலேயே வாய்கொண்ட கபந்தனைப் போன்ற ராட்சதன். ஆனால் அவன் வயிற்றில் ஒரு வாய் அல்ல அநேக வாய்கள். அந்த வாய்களை அவன் அடிக்கடி திறந்து மூடினான். திறக்கும்போது வயிற்றிலிருந்து தீயின் ஜுவாலை வாய்களின் வழியாக வெளியே வந்தது. மூடும்போது மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட வந்தியத்தேவனுடைய ஒவ்வொரு ரோமக்கால் வழியாகவும் அவனுடைய உடம்பின் ரத்தம் கசிவது போலிருந்தது. அப்படிப்பட்ட பீதி அவனை என்றைக்கும் ஆட்கொண்டதில்லை. பெரிய பழுவேட்டரையரின் பாதாள நிலவறையிலே கூட இல்லை. அவன் பின்னால் "ஹா ஹா ஹா!" என்ற ஒரு சிரிப்புக் கேட்டது திரும்பிப் பார்த்தான்.

பூங்குழலிதான்! வேறு ஒரு சந்தர்ப்பத்திலே யென்றால், அவளுடைய அந்தச் சிரிப்பே அவனுக்கு அளவிலாத பயங்கரத்தை உண்டாக்கியிருக்கும். இப்போது அதே சிரிப்பு தைரியத்தை அளித்தது.


இரத்தமும், சதையும், உடலும், உயிரும், உள்ள பெண் ஒருத்தி அவன் பக்கத்தில் நிற்கிறாள் என்பது பெரும் அபாயத்தில் ஒரு பற்றுக்கோல் போல உதவியது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குரங்கில் இருந்து மனிதன் வந்தானா...



குரங்கு என்றாலே சேட்டைதான் எல்லாருக்கும் நினைவுக்கு வரும் இல்லையா. இங்க மத்த குரங்குகள விட நம்ம மிகூர் மட்டும் கொஞ்சம் அதிகமா ஆக்டிவா இருக்க கூடிய குரங்கு. அங்க வாழ்ற மனிதர்கள் என்ன பண்றங்களோ அத போல பண்ணிகிட்டே இருக்கும். மிகூர் பண்ற எல்லா சேட்டைகளையும் அங்க வர சுற்றுலா பயணிகள் ரொம்ப ரசிப்பாங்க. அதுக்கு பிடிச்சதை வாங்கி குடுப்பாங்க. மற்ற குரங்குகள் சொல்லும் நீ இப்படி வித்தை காமிச்சிட்டே ஒருநாள் எங்கேயாச்சு மாட்டிக்க போற கவனமா இரு என்று. மிகூர் அதை ஒருநாளும் தன் காதில் போட்டுக்கொண்டதில்லை.

மனிதர்கள் செய்வதை எல்லாம் தன்னால் செய்ய முடியும் நான் ஒன்றும் குரங்கு இல்லை என்ற எண்ணம் அதன் மனதில் எழ ஆரம்பித்தது. ஒவ்வொன்றாக செய்து கொண்டிருக்கும் போது மற்ற குரங்குகளும் மிகூரை பாராட்டின. அப்புறம் என்னங்க தலைவருக்கு தலை , கால் புரியல . அவ்ளோதான் நான் மனிதன் ஆகிவிட்டேன்னு மற்ற குரங்கிடம் கூற ஆரம்பித்தது. ஒருநாள் அந்த கடலின் ஓரத்தில் ஒருவர் மீன் வலையை வீசி மீன்களை பிடித்து கொண்டிருந்தார். நம்ம மிகூருக்கு தானும் அது போல செய்ய வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசை. தினமும் அந்த இடத்திற்கு சென்று அவர் பண்ணுவதை வேடிக்கை பார்த்து கொண்டே இருக்கும்.

அடுத்த டார்கெட் மீன் பிடிக்கிறதுதான்னு முடிவு பண்ணியாச்சு. அதை செயற்படுத்தனும் இல்லையா, மீன் பிடிக்கிற இடத்திற்கு சென்றது மிகூர். அங்க சில மீனவர்கள் மீன் பிடிச்சிட்டு இருந்தாங்க. அவங்க போகிற வரைக்கும் காத்திருந்த மிகூர் தனது நபர்களை அங்கிருந்த மரங்களின் மேல் அமர சொன்னது. எல்லோரும் இங்கயே இருங்க நான் அந்த மனிதனை போல வலையை வீசி மீன் பிடிக்க போறேன் என்றது. சில குரங்குகள் வேண்டாம் என்றன. சில குரங்குகளோ பார்வையாளர்களை போல உற்சாகமாக கை தட்ட ஆரம்பித்தன. மீனவர்கள் அங்கிருந்து விலகியதும், ஒரு பக்கம் வலையை காய வைத்திருந்த இடத்திற்கு சென்றது மிகூர். அந்த வலையின் ஒரு முனையில் சென்று அதை இழுத்தது. அதனால் அதை இழுக்க முடியவில்லை. இதை பார்த்த சில குரங்குகள் முடியாது விட்டுவிடு என்றன. விடாமல் இன்னொரு பக்கமும் மிகூர் இழுத்தது. ஒரு வழியாக கடலின் ஓரத்தில் வலையை இழுத்து கொண்டு தூக்கி போட்டது. இருந்தாலும் இது இத்தனை கன்மாக இருக்கும் என்று நினைக்கவில்லை என எண்ணியது.

ஒருவழியாக வலையை வீசியாச்சு ஆனால் இந்த மனிதர்கள் வீசுவது போல் போகவில்லையே வலையின் இன்னொரு பக்கம் சென்று அதை விரிப்பதற்காக இழுத்தது. ஆனால் அங்குதான் பிரச்னையே மிகூர் கடலின் ஆழம் புரியாமல் இதை செய்து கொண்டிருந்தது. முடிந்தவரை வலையை விரிக்க முயற்சி செய்தது. ஆனால் வாலின் நடுவில் நன்றாக சிக்கி கொண்டது.

செய்வது அறியாது நீருக்குள் மூழ்கும் நிலை வந்தது. மிகூர் கத்த ஆரம்பித்தது. இதை பார்த்து கொண்டிருந்த குரங்கு கூட்டம் உடனடியாக ஓடி வந்து வலையில் சிக்கிய மிகூரை காப்பாற்றின. உயிர் பிழைத்ததை எண்ணி பெருமூச்சு விட்ட மிகூர், அதன் பிறகு தான் மனிதன் இல்லை என்று உணர்ந்து என்ன செய்யுமோ அதை மட்டும் செய்து வாழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க் கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். *– பாலக்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு ஓர் அவசர கடிதம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அன்பு வணக்கம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எட்டு வயதுச் சிறுமி ஒருவரின் இடது கை மணிக்கட்டுப் பகுதியுடன் அகற்றப்பட்ட சம்பவம் நம் மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக இந்த விபரீதம் நடந்துள்ளதென்ற செய்தி ஜீரணிக்க முடியாதது.

அதேநேரம் யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பில் பொதுமக்கள் கொண்டிருக்கக் கூடிய அபிப்பிராயம் நேர்க்கணியமாக இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

தேவையாயின் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற நோயாளர்களிடம் இருந்து கருத்துக்களை நீங்கள் பெற்றுக் கொள்வீர்களாயின், உண்மை நிலையைக் கண்டறிய முடியும்.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் தவறு காரணமாக எட்டு வயதுச் சிறுமி தனது ஒரு கையை இழந்துள்ளார். இந்த இழப்பு அந்தக் குழந்தையின் வாழ்நாள் முழுவதையும் வலியுடையதாக ஆக்கும் என்பதை நீங்கள் நிராகரிக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றோம்.

ஒருவேளை விபத்தொன்றில் இத்துயரம் ஏற்பட்டிருந்தால்கூட என்ன செய்வது விதி என்று விட்டுவிடலாம்.

ஆனால் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்தபோது ஊசி மருந்தைத் தவறாக ஏற்றியதன் மூலம் அந்தப் பாலகியின் கை அகற்றப்பட்டதெனில், அதனை ஒருபோதும் தாங்கிக் கொள்ள முடியாது.

எனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் எங்கோ குழப்பங்களும் ஒழுங்கீனங்களும் நடக்கின்றன என்பதை மேற்போந்த சம்பவமும் இதற்கு முன்னதாக நடந்து நிகழ்வுகளும் சான்றுப்படுத்துகின்றன. இதை நாம் கூறும் போது எம் மனம் நொந்து கொள்கின்றது.

ஆம், அப்பணிப்போடு செயலாற்றுகின்ற மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவ துணை நிலை உத்தியோகத்தர்கள், பரிசாரகர்கள், இதர பணியாளர்கள் என்போரின் மனம் இதனால் பாதிப்படைந்து விடுமோ என்ற ஏக்கமே அதற்குக் காரணம்.

இருந்தும் பொதுமக்களின் கருத்துக்களை – அபிப்பிராயங்களை மறைப்புச் செய்வது ஊடக தர்மம் அன்று என்பதால், சொல்ல வேண்டியதை சொல்லாமல் விடுவது முறையல்ல.

பணிப்பாளர் அவர்களே! மருத்துவ நிபுணர்கள் சிலர் தங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட விடுதிகளுக்கு செல்வதே இல்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.

மறுபுறத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளை தாதிய உத்தியோகத்தர்கள் தானே இயக்குகிறார்கள். விடுதிகளில் மருத்துவர்களைக் காண்பது அரிது. அவ்வாறாயின் இவ்வாறான பிழைகள் ஏற்படத் தானே செய்யும் என்ற வாதங்களும் மக்கள் சமூகத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

இன்னும் பலவற்றைக் கூறமுடியும். ஆனால் அது நயத்தக்க நாகரிகமன்று என்பதால் அவை தவிர்க்கப்படுகின்றன.

அதேசமயம் விசாரணை நடத்தப்படும் என்ற அறிவிப்பு வெறும் கண்துடைப்பு என்பதை மட்டும் இங்கு கூறித்தானாக வேண்டும். எதுவாயினும் இனியாவது இத்தகைய துயரச் சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான் நம் தாழ்மையான வேண்டுதல்.

# 25 மாவட்டங்களிலும் சினோபெக் 25ம் திகதிக்குள் நிறுவத் திட்டம்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

சீன எரிபொருள் நிறுவனமான 'சினோபெக்' எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் நாடுமுழுவதும்தமது கிளைகளை நிறுவவுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சினோபெக் நிறுவனம் தமது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

அதேவேளை, நாடு பூராகவும் நூற்றி ஐம்பது நிலையங்களை ஆரம்பிப்பதற்காகத் திட்டமிட்டுள்ளது.

12 இடங்களைத் தவிர ஏனைய நிலையங்களின் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அவுஸ்திரேலிய யுனைடட் பெட்ரோலிய நிறுவனமும் இவ்வருடத்துக்குள் தமது சேவையை நாட்டில் ஆரம்பிக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7,9)

# ஆளும் தரப்பு விரும்பாவிடினும் அடுத்தாண்டு ஜனாதிபதித் தேர்தல்

## ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கம் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாவலிலுள்ள சுதந்திர மக்கள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ஜனாதிபதித் தேர்தலின் அடிப்படையில் புதிய ஜனாதிபதி அடுத்த வருடம் நவம்பர் மாதம் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

பல்வேறு பொய்யான காரணங்களை முன் வைத்து உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்தாலும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாது" என்றார்.(ம)

# பளையிலிருந்து துப்பாக்கியுடன் தப்பிச்சென்ற இராணுவச் சிப்பாய் கைது

பளை இராணுவ முகாமிலிருந்து இரகசியமாக துப்பாக்கியை எடுத்துச் சென்ற இராணுவச் சிப்பாய் மாங்குளத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கள்ளக்காதலனுடன் வாழும்தனது மனைவியுடனான குடும்பத் தகராறின் எதிரொலியாக, அவர் இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கியை எடுத்துச்சென்றுள்ளது தெரிய வந்துள்ளது.

குருநாகல் பகுதியை சேர்ந்த 26 வயதான இராணுவச்சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

பளையிலுள்ள கவசப் படைப் பிரிவை சேர்ந்த இராணுவச்சிப்பாய் நேற்று விடுமுறையில் வீடு சென்றுள்ளார். எனினும் அவரது கடமை துப்பாக்கியை அவர் ஒப்படைக்கவில்லை. இது குறித்து ஆய்வு செய்த இராணுவத்தினர், சிப்பாய் துப்பாக்கியுடன் வெளியேறியிருக்கலாம் என சந்தேகித்தனர்.

உடனடியாகபளைபுகையிரத நிலையத்திற்கு சென்ற போதும், சிப்பாய் அங்கிருக்கவில்லை.

இதேவேளை, பளையில் இருந்து புகையிரதத்தில் ஏறினால் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதால், கொடிகாமத்திற்கு சென்று புகையிரதத்தில் ஏறியுள்ளார் சிப்பாய்.

பளை இராணுவத்தினர் கொடிகாமத்துக்கு தேடி வந்தபோது, கொடிகாமத்திலிருந்து புகையிரதம் புறப்பட்டிருந்தது. இதையடுத்து, பளை புகையிரத நிலையத்திலிருந்து சிவில் உடையில்இராணுவஅணியொன்று புகையிரதத்தில் ஏறியது.

அவர்கள் புகையிரதத்தில் தேடுதல் நடத்தினார்கள்.. கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் புகையிரதம் பயணித்துக் கொண்டிருந்தபோது, இராணுவச் சிப்பாயை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இதையடுத்து, இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு, மாங்குளம் புகையிரத நிலையத்தில்வைத்து, சிப்பாய் புகையிரதத்திலிருந்து இறக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். (ம-7,9)

# விடுதியொன்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

தலங்கம-நெரலு உயன பகுதியில் உள்ள விடுதியொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தின் கழுத்து பகுதியில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக காவல்துறை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

உயிரிழந்தவர் 46 வயதுடைய உளநல மருத்துவர் ஒருவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.நேற்று முன்தினம் இரவு இந்த சடலம் விடுதியிலிருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள தலங்கம பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-7,9)

# சட்டவிரோத மீன்பிடி நால்வர் வலையுடன் கைது

(திருகோணமலை)

திருகோணமலை- மதுரங்குடா கடற்பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாக கூறப்படும் நால்வர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, படகு ஒன்றையும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

கைதானவர்கள் 19 முதல் 37 வயதுக்கு இடைப்பட்ட குச்சவெளி மற்றும் புடவைகட்டு பிரதேசங்க்ளைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக குச்சவெளி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மலையாபருத்திக்குளம், சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிஹினகம ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# வாகன விபத்து ஒருவர் மரணம்

(காலி)

காலி - கொழும்பு பிரதான வீதியின் வாடியமன்கட சந்தியில் முச்சக்கர வண்டியொன்று பேருந்தொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை - வஸ்கடுவ பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதுடைய சுகத் தயானந்த சில்வா என்ற திருமணமான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த முச்சக்கரவண்டி பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கி சென்றதுடன் வேக கட்டுபாட்டை இழந்து முன்னால் பயணித்த பேருந்து மீது மோதியுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

24



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கடன் மறுசீரமைப்பு இரு தரப் பினருக்கும் ஒரு வெற்றி-வெற் றியாக இருக்கும். ஏனெனில் வணி கம் திவால் நிலையைத் தவிர்க்கி றது மற்றும் கடன் வழங்குபவர்கள் பொதுவாக திவால் நடவடிக்கை மூலம் பெறுவதை விட அதிகமாகப் பெறுவார்கள். இந்த செயல்முறை தனிநபர்களுக்கும், நிறுவனங்க ளுக்கும் நாடுகளுக்கும் ஒரே மாதி ரியாக செயற்படுகிறது. இருப்பினும் பரந்த அளவில் வேறுபட்ட அளவு களில் உள்ளது.

### தனிநபர்களின் கடன் மறுசீரமைப்பு

திவால் நிலையை எதிர்கொள் ளும் நபர்கள் தங்கள் கடன் வழங் குநர்களுடன் மீண்டும் பேச்சு வார் த்தை நடத்த முயற்சி செய்யலாம். எடுத்துக்காட்டாக, ஒரு வீட்டுக்காக பெற்ற ரூபா 4,000,000 கடனில் தொடர்ந்து பணம் செலுத்த முடி யாத ஒருவர், கடனை 75% அல் லது 3,000,000 (75% x 4,000, 000 = 3,000,000) ஆகக்குறைக்க கடன் வழங்கும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பதிலுக்கு, கடன் பெற்றவரால் விற்கப்படும் போது கடன் வழங்கு பவர் வீட்டை விற்பனை செய்யும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை பெறலாம் என்று ஒப்பந் தம் செய்து கொள்ளலாம். தனிந பர்கள் தாங்களாகவோ அல்லது கடன் நிவாரண நிறுவனத்தின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்யலாம்.

நீங்கள் வங்கியிடம் பெற்ற கடனுக்கான வட்டியினை மாறும் வட்டி வீதத்திலிருந்து நிலையான வட்டி வீதத்திற்கு மாற்றுவதும் அல்லது கடன் மீளச்செலுத்தும் கால எல்லையை மாற்றுவதும் அல்லது கடன் வகையை மாற்று வதும் கடன் மறுசீரமைப்பு என்றே கூறப்படும்.

### நிறுவனங்களின் கடன் மறுசீரமைப்பு

கடன் மற்றும் பங்கு விகிதம் The debt-to-equity ratio (D/E ratio)

கடன் மற்றும் பங்கு விகிதம் என்பது ஒரு நிறுவனம் அதன் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் எவ்வளவு கடனைக் காட்டுகிற தைக் குறிக்கிறது. இது ஒரு நிறுவனத்தின் நிதிச் செல்வாக்கை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்ப டுகிறது. மற்றும் ஒரு நிறுவனத் தின் மொத்தப் பொறுப்புகளை அதன் பங்குதாரர்களின் பங்குக ளால் (equity) வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. அதிக கடன் மற்றும் பங்கு விகிதம் என்றால் நிறுவனம் அதன் பொறுப்புகளை ஈடுகட்ட கடினமான சூழலைக் கொண் டிருக்கும்.

அதாவது ஒரு நிறுவனத்தின் கடன் -சொத்து விகிதம் அதிகமாக இருந்தால், நிறுவனத்தின் நிதி நிலைமை மோசமாக இருக்கும். அதிக கடன்-சொத்து விகிதத்தைக் கொண்டிருப்பது, நிறுவனம் சம்பா திக்கும் நிதியைக் காட்டிலும் கட னைக் குவிப்பதன் மூலம் அதன் செயற்பாடுகளுக்கு நிதியளிக்கிறது. இது எப்போதும் மோசமானதல்ல என்றாலும், இது பெரும்பாலும் அதிக நிதி அபாயத்தைக் குறிக்கிறது.

நிறுவனங்கள் அல்லது வணிகங் கள் தங்கள் கடன்களை மறுசீர மைக்க பல முறைகளைப் பின்பற் றுகின்றன. ஒன்று பங்குக்கான கடன் பரிமாற்றம். வணிகத்தில் பகுதி உரிமைக்கு ஈடாக ஒரு நிறுவனத் தின் நிலுவையில் உள்ள கடன்க ளில் ஒரு பகுதியை அல்லது அனைத் தையும் ரத்து செய்ய கடன் வழங்கு பவர்கள் ஒப்புக் கொள்ளும்போது இது நிகழ்கிறது.

நிலுவையில் உள்ள கடன் மற் றும் நிறுவனத்தின் சொத்துக்கள் இரண்டும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் பட்சத்தில், வணிகத்தை, செயற்பாடுகளை நிறுத்தும்படி கட் டாயப்படுத்துவது எதிர்விளைவாக இருக்கும் போது, இடமாற்று என்பது பொதுவாக விருப்பமாகும். கடன் வழங்குபவர்கள், தேவைப்படும் பட்சத்தில், நெருக்கடியில் இருக்கும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வார்கள்.

அதன் கடனை மறுசீரமைக்க விரும்பும் ஒரு நிறுவனம் அதன் பங்குதாரர்களுடன் நிலுவையில் உள்ள வட்டி செலுத்துதலில் ஒரு பகுதி தள்ளுபடி செய்தல் அல்லது மீதியின் ஒரு பகுதி திருப்பிச் செலுத் தாமல் விடுதல் போன்றவை சம்பந் தமாக பேச்சுவார்த்தை நடத்து வார்கள்.

இலங்கையில் கடந்த 15 ஆண்டு களுக்குள் பல நிதிநிறுவனங்களில் இவ்வாறான கடன் மறுசீரமைப்பு நடந்தேறியுள்ளன. ஆனால் கடன் மறுசீரமைப்பில் வெற்றியடைந் தவை ஒரு சில மட்டுமே. சில உதாரணங்கள் கீழே தரப்படுகின் றன.

உதாரணம்-1 ஒரு நிதிநிறு வனம் திவால் நிலையை அடைய இருந்த சந்தர்ப்பத்தில் தனது நிறு வனத்தின் பெயரை மாற்றி மக் களின் நிலையான வைப்புக்கு விரும்பியோருக்கு (திவால் நிலையை அடைய இருந்த சந்தர்ப்பத்தில் இருந்த பணத்தின் முதலும் வட்டிக் குமான பணத்தின்) ஒரு பகுதியைப் பணமாகவும் மிகுதியை தனது புதிய நிறுவனத்தின் பங்குகளாகவும் கொடுத்தது. விரும்பிய சிலருக்கு முழுவதையும் தனது புதிய நிறுவ னத்தின் பங்குகளாகக் கொடுத்தது. பலர் நிறுவனத்தின் இருவகையான விருப்பங்களையும் ஏற்கவில்லை. அவர்கள் பல வருடங்களாகப் போரா டினார்கள். அத்தோடு மக்களின் ஒத்துழைப்பின்மையால் அந்நிறு வனத்தால் மீள் எழுச்சி பெறவும் முடியவில்லை கடைசியில் அப் புதிய நிறுவனமும் திவால் நிலையை அடைய, இலங்கை மத்திய வங்கி தலையிட்டு பழைய நிறுவனத்தில் நிலையான வைப்பில் இட்டவர்க ளுக்கு அப்போது இருந்த முதலை யும் வட்டியையும் வழங்கி இப்பிரச் சினையைத் தீர்த்துக் கொண்டது. இருந்தாலும் மக்களுக்கு முதலுக் கான (பல ஆண்டு) வட்டிகள் கிடைக் கவில்லை.

உதாரணம்-2 மேற்குறிப்பிட்ட நிதிநிறுவனத்தின் குழுமத்தில் இரு ந்த மற்றொரு நிறுவனமும் அதே காலகட்டத்தில் திவால் நிலையை அடைய இருந்த சந்தர்ப்பத்தில் கடன்களுக்கான (நிலையான வைப் புகளுக்கான) வட்டி விகிதங்களைக் குறைத்து அவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடுவை யும் நீடித்தது. மற்றும் வேண்டி யோருக்கு பகுதிபகுதியாக குறைந்த வட்டியுடன் முதலைக்கொடுத்தது. அதனை வைப்பில் இட்டவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அந் நிறு வனம் குறிப்பிட்ட காலத்தில் வைப் பில் இட்டவர்களின் முதலையும் வட்டியையும் மீளக் கொடுத்தது. அதனால் அந் நிறுவனம் ஒரு குறிப்பட்ட காலத்துக்கு திவால் நிலையில் இருந்து தப்பித்துக் கொண்டது. ஆனால் மக்களின் நம்பிக்கை அற்றுப் போனதால் இப்போது அந் நிறுவனம் செயற்பட வில்லை.

உதாரணம்-3 மேற்குறிப்பிட்ட நிதிநிறுவனத்தின் குழுமத்தில் இருந்த 50 வருடங்களுக்கு மேல் இயங்கிவந்த மற்றொரு நிறுவன மும் அதே காலகட்டத்தில் திவால் நிலையை அடைய இருந்த சந்தர்ப் பத்தில் கடன்களுக்கான (நிலையான வைப்புகளுக்கான) சகல கொடுப்ப னவுகளையும் சில காலம் நிறுத்தி பின்னர் நிலையான வைப்புக்கு விரும்பியோருக்கு பணத்தையும் வட்டியையும் முழுவதுமாக கொடுத் தது. நிறுவனத்தின் பங்குகளைப் பெற விரும்பிய சிலருக்கு முழுவ தையும் தனது நிறுவனத்தின் பங்கு களாகக் கொடுத்தது. ஆரம்பத்தில் வைப்பில் இட்டவர்கள் போராட் டங்களை நடத்தியிருந்தார்கள். இருந் தாலும் பின்னர் அதன் கொடுப்ப னவுகளை ஏற்றுக் கொண்டார்கள். அதனால் அந் நிறுவனம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு திவால் நிலையில் இருந்து தப்பித்துக் கொண்டது. ஆனால் மக்களின் நம்பிக்கை அற்றுப் போனதால் இப்போது இது செயற்படவில்லை. இவ்வாறு இலங்கையில் பல நிதிநிறுவனங்களின் கடன் மறுசீர மைப்பு தோல்வியைத் தழுவின.

### இறையாண்மைக் கடன் (அரசு கடன்) என்றால் என்ன?

இறையாண்மைக் கடன் என் றால் என்ன என்பதை நாம் தெரி ந்து கொள்ள வேண்டும். இறை யாண்மைக் கடன் என்பது ஒரு வகையில் பொதுக் கடன் என்றும் தேசியக் கடன் என்றும் அழைக் கப்படுகிறது. வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான முதலீடுகளுக்கு நிதியளிக்க அரசாங்கங்கள் இதைப் பயன்படுத்துகின்றன. வெளிநாட்டு கடன் மற்றும் உள்நாட்டு கடன் சேர்ந்ததுதான் பொதுக் கடன் ஆகும்.

வெளிநாட்டு கடன் என்பது வணிக வங்கிகள், அரசாங்கங்கள் அல்லது சர்வதேச நிதி நிறுவ னங்கள் உட்பட வெளிநாட்டு கடன் வழங்குபவர்களிடமிருந்து கடன் வாங்கிய ஒரு நாட்டின் மொத்த கடனின் ஒரு பகுதியாகும். கடனா ளிகள் தனிநபர்கள், நிறுவனங்கள் அல்லது அரசாங்கமாக இருக்க லாம். அந்நியச் செலாவணிக் கட னின் மதிப்பு நாணய மாற்று விகிதங்களுடன் உணர்திறன் கொண்டது.

உள்கடன்கள் (உள்நாட்டு கடன்) என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குள் உள்ள பொது மற்றும் நிதி நிறு வனங்களிடமிருந்து எடுக்கப்படும் கடன்கள். இவை தாய்நாட்டின் பண நாணயத்தில் பெறப்படுகின் றன. மேலும் அசல் மற்றும் வட்டி ஆகியவை சொந்த நாட்டின் பண நாணயத்தில் செலுத்தப்படுகின் றன.

இலங்கையின் மொத்த உள் நாட்டுக்கடன் பிரதானமாக மூன்று வழிகளில் பெறப்பட்டுள்ளது. (1) திறைசேரி உண்டியல்கள் (2) திறைசேரி முறிகள் (3) பிற கடன்கள்.

இலங்கையின் மொத்த உள் நாட்டுக்கடனில் 18% ஆனவை திறைசேரி உண்டியல்களாகவும் 63%ஆ னவை திறைசேரி முறிக ளாகவும் உள்ளன. இதில் திறை சேரி உண்டியல்கள் குறுகிய காலத் திற்குப் பெறப்படுபவை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத முடிவெடு...

பகுதியைச் சேர்ந்த 80 வயதான முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,30)

## பெறுபேறுகள்...

results இல் பார்வையிட முடியும்

இந்தப் பரீட்சைக்கு 278,196 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 53,513 தனியார் விண்ணப்பதாரர்களும் தோற்றியிருந்தனர்.

உயர்தர விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் 20,000 ஆசிரியர்களும் 1,100 பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த ஆண்டு நடைபெற இருந்த இந்த பரீட்சை, இந்த ஆண்டு ஜனவரி 23ம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை 2,200 பரீட்சை மையங்களில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## எரிவாயு...

ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விலை 1,535 ரூபாயாகும்.

அத்தோடு லிட்ரோ எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலையானது 145 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது. அதன்படி புதிய விலை 3,127 ரூபாயாகும்.

5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 58 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விலை 1,256 ரூபாயாகும்.

அத்துடன் 2.3 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 26 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விலை 587 ரூபாயாகும். (ம-7,9)

## 28 வயது...

கடந்த மாதம் 31ஆம் திகதி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து இரு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முகமாலை பகுதியையும் மற்றையவர் யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியையும் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது ஒரு கொலை என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104,316)

## தமிழர்களை...

திருகோணமலையில் பௌத்த விகாரைகளை நிறுவவும், மேலும் சட்ட விரோதச் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கவும் பேரினவாதம் முயற்சிக்கின்றது.

"வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம். எமது தாயகத்தின் தலைநகர் திருகோணமலை.

இங்கு தமிழர்களை ஒதுக்க அல்லது இல்லாதொழிக்கச் சிங்கள - பௌத்த அடிப்படைவாதிகள் பெரிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகின்றனர். பெரும்பான்மையினரின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. அவர்களின் சண்டித்தனத்துக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

தமிழர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் பௌத்த விகாரைகள் எதற்கு சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்கள் எதற்கு? இந்த அடாவடிச் செயற்பாடுகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்" என தெரிவித்துள்ளார். (ம-7)

## சனல் 4...

2018ஆம் ஆண்டு இலங்கை அரச புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவருக்கும் ஏப்ரல் 21 தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பைக் குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானியாவின் 'த டைம்ஸ்' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியாவின் Channel 4 இலங்கையில் போர்க்குற்றங்கள் நடந்ததாக பல சர்ச்சைக்குரிய வீடியோ காட்சிகளை ஒளிபரப்பி இலங்கையில் பிரபலமடைந்தது.

யுத்தம் முடிவடைந்த பின்னர், "இலங்கையின் கொலைக்களம்" (Sri Lanka's Killing Fields) என்ற சர்ச்சைக்குரிய வீடியோவில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பல சந்தர்ப்பங்களில் அப்போதைய அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக நிராகரிக்கப்பட்டன.

ஆனால் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியவர்களை மேற்கோள் காட்டி இத்தகைய குற்றச்சாட்டுகள் அடங்கிய வீடியோக்கலை Channel 4 தொடர்ச்சியாக ஒளிபரப்பியது.

மீண்டும் இன்று இலங்கை தொடர்பான மற்றுமொரு சர்ச்சைக்குரிய வீடியோவை ஒளிபரப்பப் போவதாக அறிவித்துக்கொண்டு களம் இறங்குகிறது பிரித்தானியாவின் Channel 4.

தற்போது நாட்டை விட்டு வெளியேறி சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளராகப் பணியாற்றிய அசாத் மௌலானாவே இது தொடர்பான தகவல்களைத் தெரிவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய இரகசியங்கள் பல இந்த வீடியோவில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில்...

(வயது-34) என்பவரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

மீற்றர் வட்டிக்கு பலரிடம் பணம் பெற்று பறவை விற்பனை தொழிலை மேற்கொண்டு வந்துள்ளதாகவும், கடனை திரும்ப செலுத்த தவறிய நிலையில் அவர்களினால் வீடு, முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், வான் என்பன பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

மீற்றர் வட்டிக்காரர்களின் கொடுமையால் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் வாடகை வீடு ஒன்றில் வசித்து வந்த நிலையிலும் மீற்றர் வட்டிக்காரரின் அடாவடி அதிகரித்துள்ளது.

இவ்வாறான அடாவடித்தனத்தை தன்னால் பொறுத்துக் கொள்ள இயலாது எனவும் தான் தற்கொலை செய்யப் போவதாகவும் கணவனிடம் தெரிவித்துள்ளார்.

அவரின் இக்கருத்தை பொருட்படுத்தாத கணவன் நேற்று வெளியில் சென்று விட்டு பின்னர் வீட்டுக்கு வந்த போது தூக்கில் தொங்கிய நிலையில் மனைவி காணப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குறித்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## இலங்கையின்...

கடன் நெருக்கடி வளர்ந்து வரும் நாடுகள் உள்ளிட்ட பல உலக நாடுகளுக்கு மிகுந்த கவலையளிக்கும் விடயமாக உள்ளதாகவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் கடனில் சிக்கியுள்ள குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு உதவுவதற்காக உறுதியான கட்டமைப்பை உருவாக்குவதற்கு, ஜி20 மாநாட்டில் ஒருமித்த நிலைப்பாட்டை இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் பாராட்டத்தக்க முடிவுகள் உள்ளதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். (ம-7,9)


மெகா பவர்
திகதி 04/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1575
A 10 21 25 32 68
68258

தன நிதானய
திகதி - 2023.09.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1257
X 34 53 62 65 X
19290

Lucky 7
திகதி 04.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0053
L7 இலக்கம் 1 4
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 6 9 4 5 2 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3469
சீட்டிழுப்பு திகதி 04.09.2023
A 09 23 41 68
A 26085

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 536
விருச்சிகம் 05 23 37 57 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/04
சீட்டிழுப்பு இலக்கம் 5227
N 6 6 0 9 3 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2201 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.04 தினம் திங்கட்கிழமை
12 48 54 59 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,792,436.40
41648 855

சனிதா
திகதி 2023.09.04 வெற்றி வாரம் 4362 வர்ணம் இளம் நீலம்
01 31 49 58 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,358,512.00
75989 950

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3913 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.04 தினம் திங்கட்கிழமை
03 25 45 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,783,688/-
92125 268

கப்ருக
திகதி 04.09.2023 வெற்றி வாரம் 1377 வர்ணம் பச்சை
T 10 16 22 29 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 435,874,504.20
60337 426
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.09.04 வெற்றி வாரம் 1953 வர்ணம் செம்மஞ்சள்
22 36 47 63 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,777,923.20
94363 307

அத கோடிபதி
திங்கட் கிழமை
வெற்றி வாரம்: 2027
சீட்டிழுப்பு திகதி: 2023.09.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,968,280/-
45 50 54 62 I
27519 708


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் கணித விஞ்ஞான பிரிவில்

# தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் முதலிடம்

வெளியாகியுள்ள உயர் தர பரீட்சை பெறுபேற்றில் கணிதம் மற்றும் விஞ் ஞான பிரிவில் வவுனியா மாவட்ட மட்டத்தில் வவு னியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடங்களை பெற்று ள்ளனர்.

இதன் பிரகாரம் கணித பிரிவில் நிசாந்தன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை யும், விஞ்ஞான பிரிவில் விதுவர்சன் மாவட்ட மட்டத் தில் முதலாமிடத் தையும் பெற்றுள்ளனர்.(ம-7,9,250)

## புதுக்குளம் மகா வித்தியாலய கலைப்பிரிவு மாணவி முதலிடம்



வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரி வில் வவுனியா புதுக்குளம் மகாவித் தியால்ய மாணவி ராம்குமார் கவிப்பிரியா முதலாமிடம் பெற்றுள்ளார். (ம-7,9,250)

மன்னாரில் விஞ்ஞான பிரிவில்

# புனித சவேரியார் கல்லூரி மாணவன் முதலிடம்



(மன்னார்)

வெளியாகியுள்ள 2022ம் ஆண்டுக்கான கபொத உயர்தர பரீட்சை பெறுபேற்றில் விஞ் ஞான பிரிவில் மன். புனித சவேரியார் ஆண் கள் கல்லூரி மாண வன் அன்ரனி சரோன் டயஸ் மாவட்ட ரீதியாக முத லாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 801 ஆம் இடத் தையும் பெற்று மாவட் டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். (ம-7)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாணவி சாதனை



இறுதி யுத்தத்தில் தாய் தந் தையை இழந்த முல்லைத்தீவு மாணவி ஒருவர் உயர்த ரப் பரீட்சையில் சாதனை படைத்துள்ளார்.

டொறின் ரூபகாந்தன் என்ற மாணவி வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள் ளார். (ம-7)

கணிதப்பிரிவில்

# கிளி-மகா வித்தியாலய மாணவன் முதலிடம்



(கிளிநொச்சி)

வெளியான கல்விப் பொது த்தரா தர உயர் தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் கிளிநொச சி மகாவித் தி யாலயத்தைச் சேர்ந்த மாண வன் சண்முகம் மாதுளன் முதலாம் இடத்தினைப் பெற்று பாடசாலை சமூகத்திற்கும் மாவட்டத் திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16913)

076 825 7716 (ஆகாஸ்)



A/L 2023 - தமிழ் மீட்டல்

பா.பத்மநாதன்

B.A (Hons) (Tamil Spl) -1st Class,
M.A (Tamil) - 1st Class,M.Ed (Hons) - 1st Class,Dip in Ed.

ஆரம்பம் 06.09.2023 - புதன் பி.ப 3.30-5.00

ASC யாழ்.நகர் (16943)

கோலாசிற்றி 234 நாவலர் வீதி யாழ்ப்பாணம்
வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்

075 514 0100,077 486 9661



SILVER SHIELD

மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470



VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

(C-7193)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உடையவர்களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



WORK IN UK
WORK PERMITS
கட்டுமான தொழிலாளர்கள்

மாணவர்களும், கட்டுமானத்துறையாளர்களும் விண்ணப்பிக்கலாம்

➤ 5 YEARS WORK PERMIT
➤ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை

✓ கட்டட தொழிலாளர்
✓ நீர்க்குழாய் பொருத்துனர்
✓ கம்பி கட்டுபவர்
✓ சட்டரிங் வேலை செய்பவர்
✓ தச்சுத்தொழிலாளர்
✓ எலெக்ரீசியன் (C-7193)

போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

CIMS COLLEGE 0777-068-777



வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (15905)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மண்ணில்
18 - 08 - 2003

விண்ணில்
07 - 08 - 2023


## அமரர் சங்கர் சஞ்சீவி

கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 06.09.2023 புதன் கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை யில் நடைபெற்று தொடர்ந்து பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல் லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், இவ்வழைப்பை தனிப் பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கோவிற் கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி. (C-7192)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 09 . 1952

இறப்பு
02 . 09 . 2023

## செல்வநாயகம் பத்மநாதன்

(CTB பருத்தித்துறை)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், கொழும்பு மற்றும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் பத்மநாதன் அவர்கள் 02.09.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - செல்லபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை (பிரபல மாங்கன்று வர்த்தகர் - மாவிட்டபுரம்) - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஞ்சினியின் (ரதி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மேனகாவின் (UK) பாசமிகு தந்தையும் ராகுலனின் (UK) அன்பு மாமனாரும் ஸ்ரீஹரி பிரசாத் (UK), அஜய் மித்திரன் (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : இ.ராகுலன் (மருமகன்)
வா.சிந்துஜா (பெறாமகள்)
077 231 3186

ஆஸ்பத்திரி வீதி,.
தெல்லிப்பளை. (16937)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org